**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 4 /2023**

**Deposition of Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | மகாலட்சுமி | Taluk | |
| Husband Name | கோபிநாத் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 25.06.2025.** | | | |

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) TN47 AQ 2077 என்ற இருசக்கர வாகனத்தை நான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை நான் சம்பாதித்து வாங்கினேனா என்றால் எனது சம்பாத்தியத்தில் வாங்கினேன். எனக்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்றும் , அதனால் நீதிமன்றத்தில் இலவசமாக வக்கீல் வைக்க வேண்டும் என்று மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வசதி வாய்ப்புகள் இருப்பதால்தான் தனியாக வழக்கறிஞர் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. கடன் வாங்கிதான் நடத்தி வருகிறேன். நான் மனுவில் சொல்லியுள்ள முகவரியில் குடியிருந்த வீட்டை காலி செய்வதற்கு பின்னிட்டு புது வீட்டிற்கு வாடகைக்கு வரும்போது என் கணவர் என்னுடன் இல்லை என்றால் சரிதான்.

2) என் கணவர் என்னை விட்டு செல்லும்போது அவருடைய பொருட்கள் எல்லாம் எடுத்து சென்றாரா என்றால் அவருடைய பொருட்களை மட்டும் எடுத்து சென்றுவிட்டார். மனுவில் டிவி, பிரிட்ஜ் , பித்தளை பாத்திரம், கட்டில் போன்ற பொருட்களை நான் தற்போது குடியிருக்கும் வீட்டில் பயன்படுத்தி வருகிறேனா என்றால் இல்லை. இதற்கு முன்பு குடியிருந்த வீட்டில் மேற்படி பொருட்கள் இருந்ததா என்றால் இல்லை. தற்போது இருக்கும் வீட்டில் டிவி, மிக்சி போன்ற பொருட்கள் உள்ளது என்றால் என்னுடைய

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

சம்பாத்தியத்தில் நான் வாங்கினேன். மேற்படி பொருட்கள் எதிர்மனுதாரர்கள் வீட்டில் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பயன்படுத்தி வரும் இருசக்கர வாகனம், வீட்டு உபயோக பொருட்கள் , ஏசி போன்றவை 1ம் எதிர்மனுதாரர் எனக்கு வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. எல்லாம் நானே வாங்கி கொண்டேன். என்னுடைய அண்ணன் பணம் கொடுத்ததால் வாங்கினேன். 2ம் எதிர்மனுதாரான மாமியார் பழங்காலத்து வீட்டில் வசிக்கிறார் என்றால் சரிதான். மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எதிர்மனுதாரர்கள் அனைவரும் என்னை கொடுமைப்படுத்தினார்கள் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

3) காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், சேர்ந்து வாழ அறிவுரை கூறினார்கள் என்றால் சரிதான். CSR கொடுத்துள்ளார்கள். 2 குழந்தைகளை படிக்க வைக்க எனக்கு வசதி வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் 2 குழந்தைகளையும் கல்லூரி சேர்த்து படிக்க வைக்கிறாரா என்றால் முதல் மகள் கல்லூரி படிப்பு முடித்து விட்டார். 2 வது மகனை கல்லூரியில் சேர்த்து படிக்க வைத்து வருகிறார். எனது பிரமாண வாக்குமூலத்தின் பத்தி 2ல் என்னை அடித்து துன்புறுத்தியதால் எனது கரு கலைந்துவிட்டதென சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) எனது பிரமாண வாக்குமூலத்தின் பத்தி3 ல் எனது மாமியார் என்னை தகாத வார்த்தைகளில் திட்ட தொடங்கினார் என்றும், எனது கணவரிடம் என்னை பற்றி பொய்யான குற்றசாட்டுகளை கூறினார் என்று சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தின் பத்தி 4 ல் எனது கணவருடைய சகோதரிகளான 4, 5 எதிர்மனுதாரர்கள் மற்றும் என் மாமியார் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி அடித்தார்கள் என்றும், அதை என் கணவர் தெரிந்தும் கேட்காமல் இருந்தார் என்று சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) எனது பிரமாண வாக்குமூலத்தின் பத்தி 4 ல் வளைகாப்பிற்கான செலவுகளை என் பெற்றோர்கள் செய்தார்கள் என்றும், வளைகாப்பு பத்திரிக்கையில் என் பெற்றோர்

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

பெயர் போடுவதற்கு மாமியார் மறுத்துவிட்டார் என்று சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும், பத்தி 4 ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5, 6 , 7, 8 ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பத்தி 8 ல் 1ம் எதிர்மனுதாரர் எனக்கும், என் குழநதைகளுக்கும் எதுவும் செய்யவில்லை என்றும், கல்விக்கான செலவுகளை செய்யவில்லை என்றும், சொல்லியுள்ளது பொய் என்றும், 1ம் எதிர்மனுதாரர்தான் அனைத்து செலவுகளையும் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

6) என் பிள்ளையை வைத்து என்னிடம் சொத்து கேட்கிறியா, உன்னை அடித்தால் கேட்க யாரும் இல்லை என்று தகாத வார்த்தைகளால் திட்டியதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 8 ல் எனது மாமியார் சமையல் அறையில் இருந்து முடியை பிடித்து வெளியே இழுத்து பக்கத்து அறைக்கு இழுத்து வந்தார் என்றும், சரண்யா அருகில் இருந்த ெஹல்மெட்டை எடுதது என் தலையில் அடித்தார் என்றும், அகிலா என் காலில் கட்டையால் அடித்ததாக சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் வாங்கல் காவல் நிலையத்தில் விசாரணையின்போது என்னை அடித்ததை எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

7) 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் கேஸை வாபஸ் வாங்கவில்லை என்றால் விவாகரத்து செய்துவிடுவதாக மிரட்டியதாக சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 9 ல்1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டபோது நான்தான் சிகிச்சைக்கான செலவுக்கு பணம் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 10, 11, 12, 13, 14, 15, 16 ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 16 ல் சொல்லியுள்ள நபர்களை நீதிமன்றத்தில் விசாரித்தால்தான் நான் அவர்களிடம் கடன் வாங்கினேனா என்ற உண்மை தெரியவரும் என்று சொன்னால்

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

சரிதான். மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வசதி வாய்ப்பு இருப்பதால் நான் ஜீவனாம்சம் பரிகாரம் கேட்க தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல.

8) நான் மனுவில் கோரியுள்ள நகைகள் மற்றும் பொருட்கள் அனைத்தும் என் வசம் இருப்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இன்றும் நான் வசதி வாய்ப்புடன் ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் மற்றும் என் குழந்தைகளை வளர்த்துவதற்கு மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் அனைவரையும் மனஉளைச்சலுககு ஆளாக்குவதற்காகவும், மிரட்டுவதற்காகவும்தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– மகாலட்சுமி

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.